26th February 1966]

திருப்பத்தூர் பஞ்சாயத்துக் கூட்டு மன்றம்

* 125 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள பஞ்சாயத்து மன்றத்தில் மலேசியா நாட்டுக் குடியுரிமை பெற்ற ஒருவர் அங்கத்தினராக இருப்பது உண்மையா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இவ்விஷயத்தைப் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்று கேட்கப்பட்டிருக்கிறது.

A report on the full facts of the case has been called for

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, திருப்பத்தூரி லுள்ள பஞ்சாயத்து மன்றத்தில் மலேசியா நாட்டுக் குடியுரிமை உள்ளவர் அங்கத்தினராக இருப்பதாகத் தெரிகிறது. அது பற்றி விசாரணை நடத்தப்பட்டதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது பற்றி சம்பந்தப்பட்ட கலெக்டரிடமிருந்து தகவல் கோரப்பட்டிருக்கிறது. தகவல் வந்ததும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தகவல் எப்போது கேட்கப்பட்டது? விசாரணை செய்யப்பட்டு வருகிறதா? அல்லது விவரமே அறியப்படும் நிலையில் இருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது சம்பந்தப்பட்ட முழு விவரத்தையும் சம்பந்தப்பட்ட மாவட்டக் கலெக்டரிடம் விவரமாக ரிப்போர்ட் அனுப்பும்படி கேட்டிருக்கிறது. அது வந்ததும் மேற் கொண்டு பதில் அளிக்கலாம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: கலெக்டரை முழுத் தகவல் அளிக் கும்படி எப்போது கேட்கப்பட்டது? இது வரையில் தகவல் வர வில்லையே, அவர்கள் பதவிக் காலம் முடிவதற்குள் வந்து விடுமா, வந்து விடாதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எந்தத் தேதியில் கேட்கப் பட்டது என்ற விவரம் இல்லை. விரைவில் அனுப்பவேண்டுமென்று துரிதப்படுத்தி வருகிறோம்.

தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் சங்கம்

* 126 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) உத்தியோக உயர்வு கோரி தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் சங்கம் அண்மையில் சர்க்காருக்கு விண்ணப்பம் ஏதேனும் அனுப்பியதா?

(இ) ஆம் எனில், அதன் மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன?